## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 94/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | விஜயகுமார் | நாள் | 01.11.2023 |
| தகப்பனார் பெயர் | முத்து. | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:–**

1) தற்போது நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் M.காளிப்பட்டி, சாமியப்பன் நகரில் வசித்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால், Msc.,B.Ed., வரை படித்துள்ளேன். தற்போது நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எங்கு பணிபுரிகிறேன் என்றால், மல்லப்பனூரில் பணிபுரிந்து வருகிறேன். நான் தினமும் பணிக்கு வீட்டிலிருந்து சென்று வருகிறேன்.

2) இவ்வழக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் 1ம் பிரதிவாதி செல்வராஜ் என் சித்தப்பா மகன், 2ம் பிரதிவாதி கோவிந்தன் என் சித்தப்பா, 3ம் பிரதிவாதி சின்னபொண்ணு என் சித்தி ஆவார்கள்.

3) தற்போது பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், பிரதிவாதிகள் சொத்திலுள்ள என் அனுபவத்திற்கு இடையூறு செய்வதால் அவர்களுக்கு எதிராக தடையாணை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4) தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், என் தந்தைக்கு கிரையப்படி பாத்தியப்பட்டு, என் தந்தையால் எனக்கு தானசெட்டில்மெண்ட் அளிக்கப்பட்டுள்ளது. யாரிடமிருந்த என் தந்ை தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சம்பத் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியபட்டது என்றால், என் மற்றொரு சித்தப்பா மணிவண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி மணிவண்ணன் எங்கு பணி செய்து வந்தார்

என்றால் இரயில்வே துறையில் பணிசெய்து வந்தார்.

5) இந்த தாவா சொத்தும், இதர சொத்துக்களும் ஆதியில் என் பாட்டனார் நல்லகாளிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி என் பாட்டனார் நல்லகாளிகவுண்டருகக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரும் அவரது வாரிசுகளான என் தந்தை மற்றும் என் சித்தப்பாக்கள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வந்த காலத்தில் மேற்படி சொத்துக்களை பாகம் பிரிக்காமலேயே என் பாட்டனார் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் பாட்டனார் எப்போது இறந்தார் என்றால், தேதி சரியாக தெரியாது. ஆனால், என் தந்தை சிறுவயதாக இருக்கும் போதே அவர் இறந்து விட்டார்.

6) என் பாட்டியின் பெயர் காளியம்மாள். என் தந்தையுடன் பிறந்தவர்களில் பெண் வாரிசுகளும் உள்ளனர் என்றால் சரிதான். எத்தனை பெண் வாரிசுகள் உள்ளனர் என்றால் ஒரே ஒரு பெண் வாரிசு உள்ளார். என் பாட்டனார் இறந்ததற்கு பின்னிட்டு எங்கள் குடும்பத்திற்குள் குடும்ப சொத்துக்கள் தொடர்பாக என் பாட்டி, என் தந்தை, என் சித்தப்பாக்கள் மற்றும் அத்தை ஆகியோரிடையே கடந்த 12.07.1995ம் தேதியில் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.866/1995ன் படி பாக பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

7) மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் A–செட்டியூல் சொத்து என் பாட்டி மற்றும் என் அத்தைக்கும், B செட்டியூல் சொத்து என் தந்தைக்கும், C–செட்டியூல் சொத்து 2ம் பிரதிவாதி கோவிந்தனுக்கும், D–செட்டியூல் சொத்து என் மற்றொரு சித்தப்பா மணிவண்ணனுக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

8) மேற்படி பாக பிரிவினையில் அனைவரும் சர்வே எண்.47/A2Aல், 69 சென்ட் நிலத்தில் தலா 20 சென்ட் நிலத்தையும், சர்வே எண்.48/2ல், உள்ள 1.84 ஏக்கர் நிலத்தில் என் தந்தைக்கு 0.72 சென்ட் நிலமும், 2ம் பிரதிவாதி கோவிந்தனுக்கு 0.72 சென்ட் நிலமும், என் மற்றொரு சித்தப்பா மணிவண்ணனுக்கு 0.40 சென்ட் நிலமும் பாகமாக பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.47/A1Aல், உள்ள 0.40 சென்ட் நிலம் மேற்படி மணிவண்ணனுக்கு D– செட்டியூல் பாகமாக

ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

9) எங்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்தப்பட்ட மேற்படி, பாக பிரிவினைப் பத்திரத்தை இவ்வழக்கில் நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும் அவ்வாறு நான் எந்த பாகபிரிவினை ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.